## எழுத்து நிலைமாறல்

### வடமொழி.

25. சில சொற்கள் வடமொழியிலே எழுத்து நிலை மாறியபடி தமிழ்மொழியிலும் வழங்கப்படும்.

உ-ம்.

நாரிகேளம்—நாளிகேரம். வசி—சிவ.
ஹிஞ்ச—சிங்கம். அகதம்—அதகம் - குளிகை.
வைசாகி—வைகாசி. மதசரம் மசரதம். (இராமா.)

### தமிழ்மொழி.

26. தமிழிலிலுஞ் சிலசொற்களில் அப்படி நிலைமாறுத லுண்டு.

உ-ம்.

மிஞிறு—ஞிமிறு. பலகறை—பறையலகு. (வண்டுவிடு.)
விசிறி—சிவிறி. சதை—தசை. (சிந். முத். 175.)

## எழுத்தொருப்பாடு

27. வடமொழியிற் சில எழுத்துக்கள் தம்முள் ஒத்து நடத்தல்போலத் தமிழ்மொழியிலுஞ் சில எழுத்துக்கள் தம்முள் ஒத்துநடக்கும்.

1. இகரமும் எகரமும் தம்முள் ஒத்துநடக்கும்.

உ-ம்.

வியர்த்தல்—வெயர்த்தல். நிதி—நெதி.
சிவந்த—செவந்த. கிண்டி—கெண்டி. (தணிகைப். நாடு.)

எகரத்தோடு சேர்ந்த யகரமெய்யும் ஏகாரமும் ஒத்து நடக்கும்.

உ-ம்.

பெயர்—பேர். வியர்—வேர்.
பெயரன்—பேரன் 'அதிபதிபெயரனை' (பாரத. பதினன் 13)
வெயர்—வேர்வு. செயல்—சேல். (கந்தரந்தாதி.)

உகரமும் ஒகரமுந் தம்முள் ஒத்து நடக்கும்.

உ-ம்.

தொடை—துடை. (நால்வர்நான்மணி. அந்தாதியில்.)
நுங்கு—நொங்கு. துளை—தொளை.
உதிமரம்—ஒதிமரம். (பழமலையந்தாதி.)

ககரமும் யகரமும் கெடுதலையும் பொருந்தும்.

உ-ம்.

அகன்ற—ஆன்ற, ஆன்றோர்.
பகல்—பகல் - பாதி. பகு + அல்.
பகுத்து—பாத்து. (வள்ளுவர்.)
யானை—ஆனை. யாடு—ஆடு.
யார்—ஆர். யாத்த—ஆத்த. (இராமா.)
பேய்—பே. (சிந். சுரமஞ். 30.)
உரியசீர்—உரிச்சீர். (காரிகை.)
வேய்தனை—" வேதனைவாய்வைத்தமாயன்." (திருவரங்.)
போற்றிய—போற்றி - காக்க. (திருவி. திருக்கூ. 20.)

RangaRakes tamilnavarasam.com

### கடம்

உற்கடம் — போதல். பிரகடம் — வெளிப்படல்.
சங்கடம் — வருத்தம். விகடம் — பயம். (இரா. காகபா. 166)

### சயம்

அபசயம் — குறைதல். உபசயம் — மிகுதல் (பிரயோ. திங்.)
பரிசயம் — பழக்கம். (பாரத.) சஞ்சயம் — கூட்டிச்சேர்த்தல்
பிரசயம் — குவித்தல். (தர்க்கபரி.) நிசயம் — குவித்துவைத்தல்.

### கிரமம்

அநுக்கிரமம் — கிரமப்படி. அதிக்கிரமம் — கடத்தல். (இரா. உத். வரை. 71.)
பராக்கிரமம் — வீரம். (பாரத.) விக்கிரமம் — மேற்கோள்ளல். (பார. பன்னி.)
ஆக்கிரமம் — உதித்தல் சங்கிரமம் — அகற்றல்.
உபக்கிரமம் — ஆரம்பம். பரிக்கிரமம் — அதிசயம்.

### கமனம்

அபகமனம் — விழுதல். அதிகமனம் — மிகப்போதல்.
அபிகமனம் — புணர்ச்சி. நிர்க்கமனம் — வெளிபிற்போதல்
அவகமனம் — அறிதல். சங்கமனம் — கூடப்போதல்.
ஆகமனம் — வருதல். சுகமனம் — இலகுவிற்போதல்.

### சாரம்

அதிசாரம் — கடத்தல். உபசாரம் — உதவுதல். (சித். 2. 23.)
அநுசாரம் — பின்றொடர்தல். விசாரம் — பகுத்தறிதல். (பாரத. சூது. 4)
ஆசாரம் — பயிற்சி. (சித். 2. 23.) பரிசாரம் — ஏவல். (சிலப். மணிய.)
பிரசாரம் — வெளிப்படுத்தல். அபிசாரம் — அழித்தல். (கோயிற்.)



### பவம்

அபிபவம் — தோல்வி. பரிபவம் — இகழ்ச்சி. (பாரத. கிருட். 134.)
விபவம் — செல்வம். உற்பவம் — பிறப்பு. (பாரத. பதினே. 14.)
அநுபவம் — நேரேயறிதல். சம்பவம் — பிறப்பு. (பாரத. பதின. 79.)
பராபவம் — தோல்வி. பிரபவம் — முதன்மை.

### லாபம்

அநுலாபம் — சம்பாஷணை. பிரலாபம் — பிதற்றல்.
அபலாபம் — இகழ்தல். விலாபம் — அழுதல். (சிந்தா.)
ஆலாபம் — பேசுதல். சல்லாபம் — சம்பாஷணை. (கந்தரனு.)

### வாதம்

அபவாதம் — நிந்தை. அநுவாதம் — பின்னுஞ்சொல்லல். (திருவி.)
பரிவாதம் — புறங்கூறல். விவாதம் — சண்டை. (பார. நிவாத. 15.)
சம்வாதம் — நிகழ்ச்சிகூறல். பிரவாதம் — அறிவித்தல்.
பிரதிவாதம் — மறுமொழி. உபவாதம் — வெளிப்பாடு.

### மானம்

அபிமானம் — பெரிதாவெண்ணல். அநுமானம் — எண்ணியறிதல். (இரா. உத்.)
அவமானம் — இகழ்தல். சன்மானம் — நன்கு மதித்தல்.
உபமானம் — சமமாதல். நிர்மாணம் — சிருட்டித்தல்.
விமானம் — அளத்தலின்மை. உன்மானம் — நிறை. (பிரயோகவி.)
பரிமாணம் — அளத்தல். பிரமாணம் — திருட்டாந்தம்.

RangaRakes tamilnavarasam.com

உ - ம்:

| | |
|---|---|
| ஆன்றிசின்— அமைந்தேன். (கலி) | வந்திசின்—வந்தேன். |
| நயந்திசினோர்—நயந்தவர். | கண்டிசின்—கண்டேன். (புறநா.) |
| என்மர். (சிந். கன. 289) | காண்மர். (மதுரை.) |

நச்சினார்க்கினியர் "என்பார் என்மரெனத் திரிந்தது" என்பர். 'என்மனார்', 'மொழிமனார்' என்பவையும் "ம" என்பதனோடு அன் சாரியை பெற்றதென்பாரும், பெயர்ப்பகுபத மென்பாருமுளர்.

---

### இடையடி

| | |
|---|---|
| ஒப்ப—ஒத்தான். | ஏய்ப்ப—ஏய்த்த = ஒத்த. (செந்தில்.) |
| போல—போன்றான். | எற்றெனல்—இரங்கல். |
| மன்—மன்னினான். | பின்—பின்றினான். |

---

### வடசொல்லடி

| | |
|---|---|
| வஞ்ச்—வஞ்சித்தல் | யாச்—யாசித்தல். |
| பட்—படித்தல் | தட்—தட்டல். |
| தாவ்—தாவல்-ஓடல். | இரை—இரைத்தல் |
| கம்—கமித்தல்-போதல்.(இரகுவமி.) | காமம்—காமித்தல். |
| அத்தம்—அத்தமித்தல்-மறைதல். | சலம்—சலித்தல்(இரா.பிர.) |
| சர்—சரித்தல்-போதல். | சன் - சனித்தல். |
| நச் —நசித்தல்-அழித்தல். | அச்—அசித்தல். (சிந்தா.) |

---

## உரிச்சொற்பாகுபாடு

72. உரிச்சொற்கள் பெயரோடு புணரும்போதும், வினைச்சொல்லாக்கப்படும்போதும் ஈறுகெடுதல், ஈறு வேறுதல், முதனீளல், குறுகுதல் முதலிய பல விகாரங் களையும் அடையும்.

---

73. தடவென்னும் உரிச்சொல் பெருமை வளைவு என்னும் இரு பொருளையும் உணர்த்தும்.

உ - ம்:

பெருமை—"தாடோய்தடக்கை" (புறநா. 14.)
,, "தடவுநிலைப்பலவு" ( ,, 199)
,, "தடந்தொளுக்கிரச்செழியன்" (திருவிளை. வேத. 1.)
,, "தடாமணி" (கல்லா. 10.) சேதுபுரா. காப்பு.)
,, "தடித்ததுமேனியென்னே" (இராமா. சுந். திருவடி 83.)
,, "தடையினதிரண்டதோள்" (கலித். குறி. 9.)
,, "தடைஇயமென்றோள்" (நெடுநல்வாடை.)
வளைவு—"தடமருப்பிரண்டுமற்று" (சிந். மண். 167.)
,, "தடாயினகுருதிவாள்" (சிந்தா. கனக. 192.)
,, "தடாம்பிறைமருப்புத்திண்கை" (சிந். காந். 314.)
,, "தடவுபுதுடுப்பின்று" (கலித்தொகை. முல். 1.)
,, தடுமாற்றம்—நேர்படாமை. "கால்தடுமாறிற்றம்மா" (பார.)
,, "தடவியவுளத்துச்சேக்கா" (தணி. நந். 49.)
,, "தடைந்தன" (கல்லாடம் 31.)
,, "களிதட்பவந்தவிக்கவின்காண்" (கலி. மருத. 1.)
,, "உண்டுமகிழ்தட்டமழலைநாவில்" (மதுரைக்காஞ்சி.)
,, "தடித்தவேழத்தின்கோடு" (தணிகை. நாடு. 39.)
,, "தட்டற்றிவனுறைகின்றவர்தமை" (கந்தபு. அசமு.)
,, "தட்டாமற்செல்லும்" (நாலடி. கயவு. 5.)
,, "தடைஇயசிலை" (தணி. சீபரி. 94.)
ஆற்ற-மிக. "ஆற்றவும்பழைய" (திருவி. இந். 24.)
அற — ,, "அறவுமகங்கரித்தனன்" (பாரத. காண்டவத. 51.)
குட—வளைவு. "குடாவடிக்குருளை" (மலைபடுகடாம்.)

---

RangaRakes tamilnavarasam.com

77. கெழு என்பது நிறத்தையும், கவவு என்பது அகத்திடுதலையும், தெவு என்பது கவர்தலையும் உணர்த்தும்.

உ—ம்:

கெழு—"செங்கேழடுத்த சினவடிவேல்" (கந்தரலங்.)
கவவு—"களிற்றுரிகவைஇயகாட்சிபோல்" (கந்தபு. ஆற்.)
தெவு—"சிலையலங்கணிச்சி தெவ்வி" (தணிகைப்புரா.)

78. ஏ என்பது உயர்ச்சியை உணர்த்தும்.

உ—ம்:

"ஏத்தருமயிற்குழாம்" (சிந். நாம. 58.)
"ஏக்கழுத்தம்"—தலையெடுப்பு. (சிந். காந் 4.)
"எக்கிய கதிரவற்கஞ்சியேமுற" (இராம. கிட். பில. 27.)
"திரைக்கடலெக்கர் செய்ய". எக்கர்—மணற்குன்று. (திருவி. வேல். 18)
"ஏக்கற்றுங்கற்றார்" (வள். கல்வி. 5.) ஏக்கு—உயர்ச்சி.
"வானம்பார்க்குமேக்கழுத்துடைமையால்" (சேதுபு. வேதா. 52.)
'ஏக்கறுமிந்தவிடுக்கணொழித்தே" (சேதுபு. மங். 31.)

## ஐகாரவீறு

79. வெம்மை என்பது விரும்புதலையும், பருமை என்பது பருத்தலையும், செழுமை என்பது வளம், கொழுப்பு என்பவைகளையும், எய்யாமை அறியாமையையும் உணர்த்தும்.

உ-ம்:

வெம்மை—"கொம்மைவெம்முலை" (தணிகைப்பு.)
" "வெய்யவெந்நுனைப்பகழி" (சிந். கோவிந். 27.)
பருமை— "பராரைமராத்துருள்பூந்தண்டார்" (திருமுரு.)
செழுமை—"செழுந்துபடச்செந்நெனிறைத்" (சிந். இலக். 109.)
எய்யாமை—"எய்யாந்தவறுடையார்க்கருள்" (தணிகைப்பு.)



சேனாவரையர் "அறிதற்பொருட்டாய் எய்தலென்றானும், எய்த்தலென்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறையன்மையறிக" என்றார். அறிதற்பொருட்டாய் அதற்கு விதிவினையுஞ் சில செய்யுள்களில் வருகின்றது.

உ-ம்:

எய்த்தல் "நொந்தவென்றெய்த்தடிச்சிலம்பிரங்கும்" (சிந். முத். 85.)
" "உரனையெய்ப்பவர்போன்றுளார்" (தணி. புரா. 6.)

இன்னும் பேண் என்பதினின்று "பெட்டக்கது" (வள். அதி. 75) எனவும், கறுப்பு என்பதினின்று "கஃறெனல்" எனவும், துறுதல் என்பதினின்று தூறு எனவும், நம்பு என்பதினின்று நம்பி எனவும் வருதலையும், பிறவற்றையுங் கண்டுகொள்க.

RangaRakes
tamilnavarasam.com